4. விதி 110-ன்கீழ் முதலமைச்சரின் அறிக்கை

Citizen என்ற ஆங்கிலச் சொல்லுக்கு பெண்பால் தமிழ்ச் சொல்லாக குடிமகள் என்ற சொல்லைப் பயன்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி கோரி உள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ், கீழ்க்கண்ட அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்:*

25-4-2003 மற்றும் 29-4-2003 ஆகிய நாட்களில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தில் தமிழ் மொழியில் அரசமைப்புச் சட்டத்திலேயே, பெண்களுக்கு ஒரு பெரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது முதலானவை குறித்து, நான் பேசியவற்றிற்கு ஏற்கெனவே திருத்த அறிக்கையை இப்பேரவைமுன் நான் அளித்துள்ளேன்.

இதுகுறித்து மேலும் சில விளக்கங்களை நான் கூற விரும்புகிறேன்.

பெண்களுக்கு சம உரிமை வழங்குவதுபற்றி, 25-4-2003 அன்று சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற விவாதத்தின்போது, அதைப்பற்றி என்னுடைய நிலைப்பாடு ஒன்றினை நான் தெரிவித்தேன். Citizen என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேராக, தமிழில் "குடிமகன்" என்னும் சொல் மட்டுமே கூறப்படுகிறதே ஒழிய, "குடிமகள்" என்ற சொல் கூறப்படுவதில்லை. எனவே, ஒரு பெண்மணி உறுதிமொழி எடுக்கும்போதோ, மற்ற சந்தர்ப்பங்களிலோ, தன்னை Citizen என்று குறிப்பிட நேரும்போது, "குடிமகன்" என்றுதான் கூற வேண்டியுள்ளது. இந்த மரபை மாற்ற வேண்டும்; தன்னைக் குறிப்பதற்கு ஒரு சொல்கூட இல்லாதவள் பெண் என்பது இழிநிலை அல்லவா? இந்த இழிநிலையை மாற்றுவதற்காக இனிமேல் Citizen என்று தன்னை ஒரு பெண் குறிப்பிட வேண்டிய இடங்களில், "குடிமகள்" என்றே குறிப்பிட வேண்டும் என்று குறிப்பிட்டு, அதற்கான அரசாணையையும் வெளியிடச் செய்தேன்.

உறுதிமொழி ஏற்றல், அரசாணைகள், கடிதங்கள், அறிக்கைகள், அரசு அலுவலகங்களின் செயற்பாடுகள், பள்ளி, கல்லூரிப் பாடநூல்கள், தமிழ்நாடு அரசின் வெளியீடுகள், படிவங்கள், ஆகிய அனைத்து நேர்வுகளிலும் Citizen என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையாகத்

தமிழில் குடிமகன் அல்லது குடிமகள் என்றே, இனி பயன்படுத்த வேண்டும் என்னும் ஒரு பெரு நோக்கில் பெண்குலத்தின் ஒட்டுமொத்த விழிப்புணர்ச்சி கருதி, இவ்வாறு கொண்டுவரப்பட்டது.

காலம் காலமாக உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து வரும் பெண் இனத்திற்கு நியாயம் கிடைக்கும்வகையில், இந்தச் சொல் மாற்றத்தைச் செய்ய வேண்டும் என்னும் நியாயமான உணர்வே, என்னுடைய நிலைப்பாட்டுக்கும், நான் கொண்டுவந்த அரசாணைக்கும் காரணம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அந்த அரசாணைக்குத் தக்க திருத்தம் செய்யப்பட உள்ளது என்று கூறி அமைகிறேன்.

2. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(இ) கோரிக்கை எண் 6—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு—தொடர்ச்சி

(ஈ) கோரிக்கை எண் 8—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால்வளம்—தொடர்ச்சி

(உ) கோரிக்கை எண் 7—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—மீன்வளம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். திரு. ஆர். கிருஷ்ணன்.

திரு. ஆர். கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின்மீது பேச எனக்கு வாய்ப்பு அளித்த எங்களுடைய சமூகநீதிக் காவலர் மக்கள் தலைவர் டாக்டர் அய்யா அவர்களுக்கும், பசுமைத் தாயகத்தினுடைய தலைவர் எங்களுடைய சின்னய்யா அவர்களுக்கும், எங்களுடைய கட்சியின் தலைவர் தியாகச் செம்மல் ஜி.கே.எம். அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

கால்நடை, மீன்வளம், பால் வளம் என்பது விவசாயம் சார்ந்த தொழில்கள். ஏழை. மக்கள் வாழ பொருள் ஈட்ட வழிகாட்டும் தொழில்கள். ஆகவே, ஏழை மக்கள் நல்ன்பெற இந்த அரசு துறைகளின்பால் மேலும் அக்கறை செலுத்த வேண்டுகிறேன். பசுவின எண்ணிக்கை 1951-ல் 102.16 இலட்சமாக இருந்தது. ஆனால் 1997-ல் 90.4 இலட்சமாகக் குறைந்ததற்குக் காரணம் என்ன? அதுபோல செம்மறி ஆடுகளின் எண்ணிக்கை 1951-ல் 80.24 இலட்சமாக இருந்தது.